# 28

# கலீபா உஸ்மான் (ரழி)

நபி r அவர்களின் தோழர்களில் சிரேஷ்டமான பலர் இருந்தனர். அவர்களுள் உஸ்மான் (ரழி) அவர்களும் ஒருவர். நபி r அவர்களின் உறவினர் என்பதாலும் இஸ்லாத்துக்காக பல அர்ப்பணிப்புக்களைச் செய்தவர் என்பதாலும் இவர் உயர்வாக மதிக்கப்படுகின்றார்.

## பிறப்பு:

இவர் குறைஷிக் குலத்தின் உமைய்யா வம்சத்தைச் சேர்ந்தவர். அப்பான் என்பவருக்கும், அர்வா என்பவருக்கும் கி.பி. 575இல் (ஹிஜ்ரத்துக்கு முன் 47) மக்காவில் பிறந்தார்.

சிறு வயது முதல் நற்குண, நல்லொழுக்கங்களில் சிறந்து விளங்கினார். அன்றைய ஜாஹிலிய்யாக் கால சமூகத்தில் மது, சூது, கொள்ளை, களவு, விபசாரம் போன்ற துர்நடத்தைகள் பரவலாகக் காணப்பட்டபோதும் இவர் அவற்றிலிருந்து விலகி இருந்தார். இவர்,

- பெரும் செல்வந்தர், சிறந்த வணிகர்.
- அன்று எழுத, வாசிக்கத் தெரிந்திருந்த சிலருள் ஒருவர்.
- மிக மென்மையானவர், வெட்கமுடையவர்.
- பிறருடன் சினேகமாப் பழகுபவர்.

## திருமண வாழ்க்கை:

இஸ்லாத்திற்கு முன்பே நபி r அவர்களின் புதல்வி ருகைய்யா (ரழி) அவர்களைத் திருமணம் செய்தார். ஹிஜ்ரி இரண்டில் ருகைய்யா (ரழி) அவர்கள் வபாத்தானபோது, நபியவர்களின் மூன்றாவது புதல்வியான உம்மு குல்ஸூம் (ரழி) அவர்களை மணமுடித்தார். நபியவர்களின் இரு புதல்வியரை மணமுடித்ததன் காரணமாக 'துன்னூரைன்' (இரு ஒளியுடையவர்) என்ற சிறப்புப் பெயரைப் பெற்றார்.

## இஸ்லாத்தை ஏற்றல்:

இவர், நபி r அவர்கள் இஸ்லாமிய பிரசாரத்தை ஆரம்பித்த முதல் கட்டத்திலேயே இஸ்லாத்தைத் தழுவியவர். இஸ்லாத்தைத் தழுவிய நான்காவது நபராகக் கொள்ளப்படுகிறார்.

இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதற்காக பல வகையிலும் கொடுமைப்படுத்தப்பட்டார். இவர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட செய்தியை இவரது தந்தையின் சகோதரன் ஹகம் அறிந்தபோது கோபமடைந்தார். அவரைக் கட்டி வைத்தார். நீர் ஏற்றிருக்கும் மார்க்கத்தை விட்டுவிடும் வரை இவ்வாறே கட்டி வைப்பேன் எனச் சத்தியம் செய்தார். நான் ஒருபோதும் இந்த மார்க்கத்தை விட்டு விடப்போவதில்லை எனப் பதிலுரைத்தார். இவரது உறுதியான ஈமானை உணர்ந்த ஹகம் கட்டை அவிழ்த்து விட்டார்.

## பணிகள்:

இவர் இஸ்லாத்தை ஏற்றது முதல் உடலாலும், பொருளாலும் பல தியாகங்களை மேற்கொண்டார். இஸ்லாமிய வரலாற்றில் முதல் ஹிஜ்ரத்தாகக் கணிக்கப்படும் அபீசீனியாவிற்கான பயணத்தில் இவரும், தனது மனைவியுடன் கலந்து கொண்டார். பின்னர் மதீனாவிற்கான ஹிஜ்ரத்திலும் கலந்து கொண்டார். தனது செல்வத்தில் பெரும்பகுதியை இஸ்லாத்திற்காகச் செலவிட்டார். ஒவ்வொரு வெள்ளிக் கிழமையிலும் ஒவ்வோர் அடிமையை விடுதலை செய்தார். தாராள மனங்கொண்ட இவர், ஒரு முறை 4,000 தங்க நாணயங்களை தருமம் செய்தார். முஸ்லிம்கள் மேற்கொண்ட தற்காப்புப் போர்களில் பங்குகொண்டார். அவற்றிற்கான உதவிகளையும் வழங்கி வந்தார். தபூக் யுத்தத்திற்காக 950 ஒட்டகங்களையும், 50 குதிரைகளையும் 1000 தங்க நாணயங்களையும் அன்பளிப்புச் செய்தார்.

முஸ்லிம்கள் ஹிஜ்ரி 6 இல் உம்ராச் செய்வதற்கு மக்கா சென்றபோது குறைஷிகள் அவர்களைத் தடுத்தார்கள். இச்சந்தர்ப்பத்தில் முஸ்லிம்களின் பிரதிநிதியாக இவர் மக்காவிற்கு அனுப்பப்பட்டார். அவர் திரும்பி வருவதற்குத் தாமதமானபோது உஸ்மான் (ரழி) அவர்கள் கொலை செய்யப்பட்டுவிட்டதாக வதந்தி பரவியது. அவ்வேளை முஸ்லிம்கள் அவருக்காகப் பழிவாங்குவதென்று நபியவர்களிடம் வாக்குறுதி அளித்தார்கள். இது, ‘பைஅத்துர் ரிழ்வான்’ என அழைக்கப்படுகிறது.

முஸ்லிம்கள் மதீனாவிற்கு ஹிஜ்ரத் சென்ற பின்னர் நீருக்காக சிரமப்பட்டார்கள். யூதனொருவனுக்குச் சொந்தமான ‘‘பி.ஃறு ரூமா’’ எனும் கிணற்றுக்குச் சென்று வந்தனர். அவன் முஸ்லிம்களிடம் அதிகமாகப் பணம் அறவிட்டான். அப்போது நபியவர்கள், ‘ரூமா கிணற்றை எவர் வாங்கி வக்பு செய்கின்றாரோ, அவர் சுவனம் செல்வார்’ என்று சொன்னார்கள். உடனே உஸ்மான் (ரழி) அவர்கள் 20,000 திர்ஹம் கொடுத்து அக்கிணற்றை வாங்கி வக்பு செய்தார்கள். பின்னர் முஸ்லிம்களின் தொகை அதிகரிக்கவே நீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டது. அவ்வேளை ‘பி.ஃறு ரூமாவை யாராவது தோண்டி, ஆழமாக்கினால் அவருக்கு சுவர்க்கம் கிடைக்கும்’’ என நபியவர்க்ள கூறினார்கள். இதனையும் உஸ்மான் (ரழி) அவர்களே செய்வித்தார்கள். இதனால் அல் அஷரதுல் முபஷ்ஷரூன்களில் (சுவர்க்கத்தைக் கொண்டு நன்மாராயம் கூறப்பட்டவர்கள்) ஒருவராக நபி (ஸல்) அவர்களால் அறிவிக்கப்பட்டார்கள்.

## பண்புகள்:

அல்குர்ஆனை முழுமையாக மனனம் செய்திருந்த இவர்கள் அதிக இறையச்சம் உள்ளவராகவும் நபியவர்கள் மீது பற்றுக் கொண்டவராகவும் இருந்தார்கள். மறுமைநாளை அதிகமாகப் பயந்தார்கள். அல்குர்ஆனை நீண்ட நேரம் ஓதித் தொழுது வந்தார்கள். பணிவு, இரக்கத் தன்மை, பிறரை மன்னிக்கும் தன்மை, பொதுநலன் பேணுதல் போன்ற நற்பண்புகள் இவரிடம் நிறைந்திருந்தன.

## கலீபாவாகத் தெரிவு:

நேர்வழி நடந்த கலீபாக்களின் வரிசையில் இவர் மூன்றாமவர் ஆவர். இவருக்கு முன்னர் ஆட்சி செய்த இரு கலீபாக்களுக்கும் பக்கபலமாக இருந்த இவர், மஜ்லிஸுஷ் ஷூரா எனும் ஆலோசனை சபையின் ஓர் அங்கத்தினராகவும் இருந்தார். உமர் (ரழி) அவர்கள் தனக்குப் பின்னால் கலீபாவாக வருவதற்கு தகுதியானோர் எனக் கண்ட 6 நபர்களைக் குறிப்பிட்டு அவர்களில் ஒருவர் கலீபாவாக வர வேண்டுமெனப் பணித்திருந்தார்கள். அவர்களில் ஒருவரான உஸ்மான் (ரழி) அவர்கள் கலீபா உமர் (ரழி) அவர்களின் மரணத்தின் பின்னர் பெரும்பாலானோரின் விருப்பப்படி ஹிஜ்ரி 24இல் கலீபாவாக நியமிக்கப்பட்டார்.

## சேவைகளும் வெற்றிகளும்:

முன்னைய கலீபாக்கள் போன்றே இவரது காலத்திலும் மதீனா முஸ்லிம் அரசின் தலைநகராக விளங்கியது. உமர் (ரழி) அவர்களின் ஆட்சியின்போது கடற்படை அமைப்பதற்கு அனுமதி மறுக்கப்பட்டது. எனினும் கலீபா உஸ்மான் (ரழி) அவர்கள் அதற்கான அனுமதியை வழங்கினார். ஷாம் பிரதேச கவர்னராக இருந்த முஆவியா (ரழி) அவர்கள் ஹிஜ்ரி 27 இல் கடற்படையை அமைத்து உரோமப் படைகளின் எதிர்ப்புகளை வெற்றி கொண்டார். சைப்ரஸ் முதலான தீவுகள் முஸ்லிம்களின் கட்டுப்பாட்டில் வந்தன.

உஸ்மான் (ரழி) அவர்களின் ஆட்சிக் காலத்தில் பாரசீக, உரோம பேரரசுகளுக்குட்பட்ட பல ஆசிய ஆபிரிக்க நாடுகள் இவரின் கிலாபத்தின் கீழ் வந்தன. முஸ்லிம்களின் முன்மாதிரியை கண்ட அப்பிரதேச மக்கள் இஸ்லாத்தைத் தழுவினார்கள். இதனால் பொருளாதார அபிவிருத்தி ஏற்பட்டது. கலீபா அவர்கள் உரிய முறையில் பொது நிதியைச் செலவு செய்தார்கள்.

ஹிஜ்ரி 26 இல் அல்-மஸ்ஜிதுல் ஹராமும், ஹிஜ்ரி 29இல் அல்-மஸ்ஜிதுன் நபவியும் விஸ்தரிக்கப்பட்டன.

இவரது காலத்தில் அறபு மொழி தெரியாத பலர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டனர். இதனால் அல்குர்ஆனை ஓதும் முறைகளில் முரண்பாடுகள் ஏற்பட்டன. இதனைக் கேள்வியுற்ற கலீபா ஏற்கனவே தொகுக்கப்பட்டு ஹப்ஸா (ரழி) அவர்களிடம் இருந்த அல்குர்ஆன் பிரதியைப் பெற்று ஸைத் இப்னு ஸாபித் (ரழி) அவர்களின் தலைமையில் ஒரு குழுவை அமைத்து அல்குர்ஆனின் பல பிரதிகளை எழுதுவித்தார்கள். இப்பிரதி ''முஸ்ஹப் உஸ்மானி''

எனப் பெயர் பெற்றது. இதனால் அல்குர்ஆன் மூலம் முஸ்லிம்களை ஒன்றுபடுத்தியவர் என்ற கருத்தில் இவரை ‘ஜாமிஉல் குர்ஆன்’ என சிறப்புப் பெயரிட்டு அழைத்தனர்.

இவரது ஆட்சியின் இறுதிப் பகுதியில் ஆட்சியைக் கவிழ்க்க எண்ணிய சூழ்ச்சிக்காரர்கள் பொய்ப் பிரச்சாரங்களை முடுக்கி விட்டார்கள். இதற்கு அப்துல்லாஹ் இப்னு ஸபா எனும் நயவஞ்சகன் தலைமை தாங்கினான். சில குற்றச்சாட்டுக்களை முன்வைத்த அவர்கள் கலீபாவின் வீட்டை முற்றுகையிட்டனர். இதனால் கலீபா வெளியே செல்ல முடியாதவாறு தடுக்கப்பட்டார்.

சில நாள் முற்றுகையின் பின்னர் அவர்களுள் சிலர் கலீபாவின் வீட்டுக்குள் அத்துமீறிச் சென்று அவரை கொலை செய்தனர். இது ஹிஜ்ரி 35 ஆம் வருடம் துல்ஹஜ் 12 ஆம் நாள் நிகழ்ந்தது. இதன் மூலம் கலீபா அவர்களின் 12 வருட ஆட்சிக் காலம் அவர்களது 82 ஆம் வயதில் முற்றுப் பெற்றது.

**பயிற்சி:**

1. உஸ்மான் (ரழி) அவர்களின் சிறப்புப் பெயர்களைக் குறிப்பிடுக.
2. அப்பெயர்கள் அவருக்குக் கிடைத்தமைக்கான காரணங்களைக் குறிப்பிடுக.
3. உஸ்மான் (ரழி) அவர்கள் இஸ்லாத்திற்காகச் செய்த தியாகங்களைப் பட்டியல்படுத்திக் காட்டுக.
4. உஸ்மான் (ரழி) அவர்களிடம் காணப்பட்ட நற்குணங்களை எடுத்துக் காட்டுக.